முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

திட்டக்குடி.

**OS.93/2012 PW: 1 04.09.2023**

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **04** ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய என்பவரின் சந்தோஷம் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி.T.நித்யகலா, B.Com., B.L., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்தோஷம் | வயது | 55 |
| த/க. பெயர் | ஆறுமுகம் | தொழில் | கூலிவேலை |
| ஜாதி | | கிராமம் | மங்களூர் |
| வட்டம் | | மாவட்டம் | |

**குறுக்கு விசாரணை**

1. வழக்கு போட்ட சொத்து யாரிடம் கிரையம் வாங்கியது என்றால் பழனிவேலிடம் கிரையம் வாங்கியது. பழனிவேலுக்கு அந்த சொத்து எப்படி கிடைத்தது என்றால் கிரையம் வாங்கியது. பழனிவேலுவிடம் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 4 பேர். பழனிவேல் அப்பா பெயர் என்ன என்றால் சின்னான். சின்னானுக்கு பழனிவேல், முத்துகருப்பன், கொளஞ்சி, மலர் ஆகியோர் பிள்ளைகள் என்றால் சரிதான். சின்னான் சொத்தை யாருக்காவது எழுதி வைத்தது தெரியுமா என்றால் தெரியாது. அதனால் அவர் யாருக்கும் எழுதி வைக்காமல் இறந்ததால் இந்த 4 பேருக்கு பாத்தியம் என்றால் சரிதான். அதனால் ஒருவரிடம் மட்டும் கிரையம் வாங்கியது செல்லாது என்றாலும், சரியல்ல. பழனிவேலிடம் மட்டும் தான் கிரையம் வாங்கினீர்கள் என்றாலும் அதில் மூன்று பேருக்கு பாகம் உள்ளது என்றாலும் நீங்கள் வாங்கிய கிரயம் செல்லாது என்றால் சரியல்ல. ஏற்கனவே இருந்த சொத்து முத்துகருப்பன் பெயரில் பட்டா இருந்தது என்றாலும், முத்துகருப்பன் வாரிசுகளிடம் இருந்து பதிவு பெறாமல் பெற்ற கிரயைம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 2 வது ஆவணம் முதல் 6 வது ஆவணங்கள் கிரையத்திற்கு பின்னிட்டு பெறப்பட்டவைகள் என்றால் சரிதான்.

2. முத்துகருப்பன் அவர் மனைவி விஜயா முத்துகருப்பன் இறந்து போனதால் பாக வழக்கு போட்டது தெரியுமா என்றால் தெரியும். நான் கிரையம் வாங்கிய பிறகுதான் வழக்கு போட்டுள்ளார்கள். அவர் போட்ட பிறகு முதல்நிலை தீர்ப்பாணை

பிறப்பித்தது ஆணையர் நியமனம் செய்து வழக்கு சொத்தை பார்வையிட்டார்கள் என்றால் தெரியாது. உங்கள் வழக்கறிஞர் திருவரசு தான் அந்த வழக்கில் ஆணையராக நியமனம் செய்யப்பட்டது என்றால் தெரியாது. அந்த வழக்கில் முதல்நிலை தீர்ப்பாணை ஒருதலை பட்ச தீர்ப்பாணை ரத்து செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் பேரில் வேறு ஆணையர் நியமிக்கப்பட்டடார் என்றால் தெரியாது. இந்த உண்மையை மறைத்து தான் இடைக்கால உறுத்துக்கட்டளை பெற்றுள்ளீர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு போட்டது மலர், கொளஞ்சிக்கு தரியுமா என்றால் தெரியும். உங்களுக்கு கிரையம்கொடுத்தது மலர்,கொளஞ்சிக்கு தெரியுமா என்றால் தெரியும். அதனால் பாக வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும்போது கிரையம் வாங்கியது செல்லாது என்றால் சரியல்ல. அதனால் வழக்கு பிறகாரம் எந்தவித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(Sd/Nithyakala)**
**Principal District Munsif,**
**Tittagudi.**